1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு தடவையும் 4 துணைக் கேள்விகள் கேட்கும் அளவிற்கு கேட்டுக் கொண்டே போகிறீர்கள். இவ்வளவு நேரம் அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் ஆழமாகப் பரிசீலனை செய்து வருகிறோம்.

வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்படும் மனைகள்.

*வினா எண் 816—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் முதலில் ஒதுக்கப்படும் வீட்டுமனைக்குப் பதிலாக வேறு வீட்டுமனை ஒதுக்கும்பொழுது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடுகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஒரு சில ஒதுக்கீடுதாரர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தங்களுக்கு முதலில் ஒதுக்கிய மனைகளுக்குப் பதிலாக வேறு மனைகள் ஒதுக்கும் போது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடு செய்துள்ளனர். இவற்றை அரசு ஆராய்ந்து அவை ஒவ்வொன்றின் நியாய அடிப்படையில் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கப் பொதுவான ஆணை பிறப்பிக்க உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வீட்டு மனைகளை ஒதுக்கும்போது அதற்கான தொகையை தவணை முறையில் செலுத்த வேண்டும் என்றிருக்கிறது. அது விதி முறை. ஆனால் அப்படி ஒதுக்கும்போது மொத்த தொகைக்கும், அந்த மனைக்கான மொத்த தொகைக்கும் வட்டியை செலுத்த வேண்டும் என்று சொல்கிறார்களே இது நியாயம்தானா, அதைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனை கொடுக்கப்பட்டு, அவர்கள் அதை வேண்டாம் என்று வேறு மனையைக் கேட்பார்களேயானால். அப்படி புதிதாகக் கொடுக்கப்படுகிற மனையின் அன்றைய

விலையை நிர்ணயித்து, அவர்களிடம் இருந்து வாங்கப்படுகிறது, ஏற்கனவே அவர்கள் கொடுத்து விட்ட வட்டித் தொகையை கழித்து விடலாம், ஆனால் பொறுப்புத் தொகையை கழித்து விடாமல் பறிமுதல் செய்துக் கொள்வது என்பதுதான் இன்றைய தினம் இருக்கிற விதிமுறை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நான் கேட்டது தவணை முறையில் வசூலிக்கப்பட வேண்டும் என்று விதிமுறையிருக்கிறதே அவர்கள் மொத்த தொகைக்கும் வட்டியை ஆரம்பத்திலேயே வசூலிப்பது நியாயம் தானா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இன்றைய தினம் இருக்கக் கூடிய சட்டத்தைத்தான் நான் சொன்னேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தில் மனைகளைக் கொடுக்கிறபோது அவர்கள் கேட்கின்ற ஒரு பாரத்தை பூர்த்தி செய்து கொடுக்கும் நேரத்தில், அதிலிருக்கும் விதிமுறைகள் 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப் பட்டது. அதில் குறிப்பாக சென்னையில் இருப்பவர்கள்தான் வீட்டு மனையை வாரியத்தின் மூலம் பெற முடியும். அவர்களுக்குத் தான் அந்த உரிமை உண்டு என்றிருக்கிறது, ஆனால் வெளியூர் களில் இருப்பவர்கள்கூட வீட்டு மனையை அப்படி வாரியத்தின் மூலம் வாங்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இது போன்ற கண்டிஷன்களை யெல்லாம் நீக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, என்னென்ன மாற்றங்கள் எல்லாம் செய்தால் மக்களுக்கு பயன்படும் என்று சிந்தித்து எழுதிக் கொடுத்தால் வீட்டு வசதி வாரியத்திற்கு அனுப்பி பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. என். புழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலிருந்து வீடுகளைப் பெற என்னென்ன தகுதிகள் வேண்டும், முதலிலேயே அதற்கு 300 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள், இது நியாயம்தானா. இதைக் குறைப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போட்டால் விவரமான பதில்கள் தருகிறேன்.